| | | |
|---|---|---|
| சாட்சி :PW1<br>சுந்தரமூர்த்தி | OS. 249/2022 | 29.01.2024 |

**PW1– குறுக்கு விசாரணை**

தாவா சொத்தின் கிழமேல் அளவு 24 அடி, தென்வடல் அளவு 20 அடி ஆகும். மேற்படி அளவுகளை எனது வழக்குரையில் சொத்துவிபரத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் 480 அடி என சொல்லியுள்ளேன். கிழமேல் தென்வடல் அளவு குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்கு சொத்து ஆதியில் சன்னாசி என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். சன்னாசி என்பவருக்கு பிச்சைக்காரன், சங்கிலி என இரண்டு மகன்கள் என்றால் சரிதான். பிச்சைக்காரன் என்பவருக்கு மருதாயி, ராமாயி, அம்மாசி ஆகிய மூன்று மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி மருதாயி என்பவருக்கு விஸ்வநாதன், நடராஜன் ஆகிய 2 மகன்கள் என்றால் சரிதான். நானும், எனது சகோதரர் மகேஸ்வரனும் மேற்படி நடராஜனின் வாரிசுகள் ஆவோம். எனது உடன் பிறந்தவர்கள் சிவகாமி, நவமணி. மேற்படி நபர்களை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் திருமணமாகி வெளியில் செட்டிலாகிவிட்டதால் சேர்க்கவில்லை. பிச்சைகாரனின் 2 வது மனைவி ராமாயிக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். பிச்சைக்காரனின் 3 வது மனைவி அம்மாசிக்கு சொக்கலிங்கம், கமலா ஆகிய இருவர் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதிகள் சொக்கலிங்கத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். பிச்சைக்காரனின் சகோதரர் சங்கிலி என்பவருக்கு நாகம்மாள், கந்தசாமி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். குடும்ப சொத்துக்களை பிச்சைக்காரன், சங்கிலி ஆகியோர் அவர்களது காலத்திலேயே பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா

சொத்தானது சங்கிலியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சங்கிலியின் மகன் கந்தசாமி திருமணம் செய்துகொள்ளாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாகம்மாளின் மகள் சீதை என்றால் எனக்கு தெரியாது. சீதையின் மகள் இந்திராணி என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து பட்டா கேட்டு இந்திராணி இலால்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்து அதன் பேரில் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை நான் வெளியூரில் இருந்தேன். தாவா சொத்திற்கு இந்திராணியின் மனுவின் பேரில் வாரிசு முறைப்படி இந்திராணியின் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல்ெ சய்வதற்கு முன்பு VAO அலுவலகம் சென்று வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று பார்த்தேனா என்றால் எனது அப்பா, பெரியப்பா, சித்தப்பா ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டவாக இருந்தபோது பார்த்தேன் அதன்பின்னிட்டு பார்க்கவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். இந்திராணி பெயரில் பட்டா ஏற்பட்டு தாவா சொத்தை இந்திராணி 1ம் பிரதிவாதிக்கு 06.05.2002ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள விபரத்தை நான் படித்து பார்த்தேன். 1ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் பெயரும் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட கிரையப்பத்திரத்தை பெற்று நான் படித்து பார்க்கவில்லை. இந்திராணி தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றும், அந்த ஆவணத்தில் கண்ட அளவுகளை தான் எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது ஆவணத்தில் கண்ட

அளவுகளை தான் நான் சொல்லியுள்ளேன். சங்கிலி மகன் கந்தசாமி தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனாருக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எழுதிக்கொடுத்துள்ளார். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி செட் போட்டுள்ளாரா என்றால் இல்லை. இந்திராணி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரன்படி 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும், வழக்குசொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தான் அனுபவ சுவாதீனத்தில் உள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணத்தின்படி வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் நான் 1980லேயே எனது அப்பா வழக்கு சொத்தை கிரையமாக வாங்கிவிட்டார். தாவா சொத்தில் நான் எந்த பாத்திய அனுபவத்திலும் இல்லாததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.